## திருநெல்வேலி மாநகராட்சி

**2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

1) இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 4 மண்டல அலுவலகங்கள், சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகளை சுய உதவிக் குழுக்கள் மூலம் 645 நபர்கள் மாமன்ற தீர்மானம் எண் 112, நாள் 29.10.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மாமன்ற தீர்மான எண் 59, நாள் 08.06.2020ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 21.09.2020 தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 645 நபர்களை 24.09.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு/ |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிகுழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீஜெயம் சுகாதார பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ போராட்சிஅம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | ஸ்ரீசெல்வ விநாயகர் சுகாதாரப்பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 16 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 18 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழு | 18 | பாளை மண்டலம் |
| 20 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 21 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 22 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 23 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 24 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 25 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 26 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 27 | மங்களஈஸ்வரி பெண்கள் | 21 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| | சுயஉதவிக்குழு | | |
| 28 | பாரதி ஆண்கள் சுய உதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | செந்தமிழ் மகளீர் சுய உதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப் பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | செம்மொழி சுய உதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப்பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமையன்பட்டி உரகிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

ஆ) மேலும் திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நலச்சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1.1.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுயஉதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக் குழுவும் மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண் 13, நாள் 28.03.2018-ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுய உதவிக்குழுக்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண். 59, நாள்: 08.06.2020ன் பிரகாரம் 15.9.2020 உடன் முடிவடைவதால் மேலும் 18.09.2020 முதல் 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். M3/13618/2020 நாள்: 26.8.2020ன் படி தூய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ.388 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஊதியம் வழங்கவும், 1.4.2020 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மட்கும் மற்றும் மட்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு

மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.388/- என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண். 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி3) துறை, நாள் 4.5.98-ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப் பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,25,00,000 ஆகும். சுயஉதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.86,60,160/- ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 45 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.359/- என மாவட்ட ஆட்சித் தலைவரின் செ.மு. ஆணை ந.க.எண் M3/16361/2019, நாள் 02.07.2019ன்படி தின ஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண். 59 நாள்: 08.06.2020ன்படி முறையே அனுமதி காலம் 26.6.2020 முதல் 21.09.2020 முடிய மற்றும் 20.06.2020 முதல் 15.09.2020 உடன் முடியவுள்ள நிலையில் அ) வில் குறிப்பிட்டுள்ள 645 பணியாளர்களுக்கு 24.09.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கும் ஆ) வில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு 18.09.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் M3/13618/2020 நாள்: 26.8.2020ன் படி தூய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ.388 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஊதியம் வழங்கவும், 1.4.2020 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 132:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(H2/7560/2017)

---

2) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டும், மாநகர பகுதிகளில் தண்ணீர் தேங்கும் இடங்களில் கொசுப்புழு உற்பத்தியினை தடுக்கும் பொருட்டும், விரைந்து நடவடிக்கை எடுத்து தீவிரமாக செயல்படுத்த ஏதுவாக 55 வார்டுகளுக்கும் தேவைக்கேற்ப நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/J1 நாள் 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ஒ.மு.எண்.13433/2018/J1, நாள் 17.09.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ள Plan 300 HH-ன்படி மாநகராட்சியில் மொத்தம் உள்ள 155408 வீடுகளுக்கும், மாநகர பகுதிகளில் உள்ள 12500 வணிக வளாகங்களுக்கும் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 50 வீடுகள் வீதம் 6 நாட்களுக்கு 300 வீடுகள் என்ற விகிதத்தில் 560 DBC களப்பணியாளர்கள் மாநகர பகுதிகளில் பணியாற்றி வருகின்றனர். தற்பொழுது மீண்டும் பருவமழை காலம் துவங்க இருப்பதால் ஏற்கனவே மாமன்ற அனுமதி பெற்று பணிபுரிந்து வரும் 560 டெங்கு தடுப்பு பணியாளர்கள் மற்றும் கொரானா தடுப்பு நடவடிக்கைக்காக பணியமர்த்தப்பட்டுள்ள 23 பணியாளர்கள் ஆக மொத்தம் 583 பணியாளர்களை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தவும், அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். M3/13618/2020 நாள் 26.8.2020ன் படி நாள் ஒன்றுக்கு ரூ.366/- ஊதியம் வழங்கவும், 1.4.2020 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/J1 நாள் 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ஒ.மு. எண்13433/2018/J1 நாள் 17.9.2018-ன்படி, திருநெல்வேலி மாநகராட்சியில் பணிபுரியும் 583 DBC பணியாளர்களை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண் M3/13618/2020 நாள் 26.8.2020ன்படி நாள்

ஒன்றுக்கு ரூ.366/- ஊதியம் வழங்கவும், 1.4.2020 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 133:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

( H4/76/2020)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சை மண்டலம், வார்டு எண் 05, நகரளவு வார்டு எண் J, பிளாக் எண் 14, சர்வே எண் 1102/Part 1, 1103 & 1104-ல் மொத்த பரப்பளவு 1 ஏக்கர் 38 செண்ட் இடத்தில் ஒரு பகுதியில் மத்திய மாநில அரசின் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் Re-Development of Office cum Commercial Complex பணி செய்வதற்கு மேற்கண்ட இடம் தேர்வு செய்யப்பட்டு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாக அலுவலகம், சென்னை 28 அவர்களின் Roc.No.14595/2018/IHSDP-3, Dt.10.07.2020 படி நிர்வாக அனுமதியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலக முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் Roc.No.1473/2020/DO2, Dt.14.08.2020-யின்படி தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்ட பணி துவங்கப்படும் நிலையில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் தற்போது பழைய தச்சை மண்டல அலுவலக கட்டிடம 38.50 m நீளம் x 18.50 m அகலம், ஆய்வு கூட்ட கட்டிடம் 38.50 m நீளம் x 10.90 m அகலம் மற்றும் Store Room கட்டிடம் 21.80 m நீளம் x 7.50 m அகலத்தில் மற்றும் மண்டல அலுவலக நுழைவுவாயில் சாலையின் தென்பகுதியில் அமைந்தள்ள இ-சேவை மையம் கட்டிடம் தரைத்தளம் 4.35 m x 6.25 m அகலம், 4.35 m + 2.05 m/2 நீளம் x 1.67 m அகலம் & 2.05 m + 1.67 m/2 நீளம் x 2.53 m அகலம் மற்றும் முதல் தளம் 4.35 m நீளம் x 6.25 m அகலம், 4.35 m + 2.05 m/2 நீளம் x 1.67 m அகலம் & 2.05 m + 1.67 m/2 நீளம் x 2.53 m ஆகும். மேற்கண்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தினால் தான் புதிய கட்டுமானப் பணி துவங்க இயலும். எனவே (1) மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுதிடவும், (2) அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.11.40 லட்சத்திற்கு அனுமதியம், (3) மேற்கண்ட கட்டிடத்தை இடிக்கப்படும் போது எடுக்கப்படும் ஜன்னல், கதவு, கம்பிகள் மற்றும் மரக்கதவுகள் மரப்பலகைகள் மற்றும் அலுமினியம் frame முதலியவைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி அப்புறப்படுத்திடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டவாறு பணி துவங்கப்படும் இடத்தில் கட்டப்பட்ட 38.50 m நீளம் x 18.50 m அகலம் கொண்ட பழைய தச்சை மண்டல அலுவலக கட்டிடமும், 38.50 m நீளம் x 10.90 m அகலம் கொண்ட ஆய்வு கூட்ட அரங்க கட்டிடமும், 21.80 m நீளம் x 7.50 m அகலம் கொண்ட Store Room கட்டிடமும் மற்றும் மண்டல அலுவலக நுழைவுவாயில் சாலையின் தென்பகுதியில் தரைத்தளம் 4.35 m x 6.25 m அகலம், 4.35 m + 2.05 m/2 நீளம் x 1.67 m அகலம் & 2.05 m + 1.67 m/2 நீளம் x 2.53 m அகலம் மற்றும் முதல் தளம் 4.35 m நீளம் x 6.25 m அகலம், 4.35 m + 2.05 m/2 நீளம் x 1.67 m அகலம் & 2.05 m + 1.67 m/2 நீளம் x 2.53 m அகலம் கொண்ட இ-சேவை மையம் கட்டிடம் ஆகிய (1) பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுதிடவும், (2) அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.11.40 லட்சத்திற்கு அனுமதியம், (3) மேற்கண்ட கட்டிடத்தை இடிக்கப்படும் போது எடுக்கப்படும் ஜன்னல், கதவு, கம்பிகள் மற்றும் மரக்கதவுகள் மரப்பலகைகள் மற்றும் அலுமினியம் frame முதலியவைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி அப்புறப்படுத்திடவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 134:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/5561/2018-தச்சை)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலப் பகுதிக்குட்பட்ட சீர்மிகு நெல்லை திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் கூடிய பயணிகள் நிற்குமிடம் (Passengers Shelter) அமைக்கும் பணிகரு ரூ.1.80 கோடிக்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டு வேலை

ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி பணியில் கீழ்காணும் விபரப்படியான பழுதடைந்துள்ள பழைய பயணிகள் நிற்குமிடத்தை முழுமையாக அகற்றிவிட்டு புதியதாக அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பயணிகள் நிற்குமிடம் அமைந்துள்ள இடம் | விபரம் |
|---|---|---|
| 1 | பேட்டை காவல் நிலையம் அருகில் | 6.00 மீ x 3.00மீ அளவில் GI Sheet (கூரை) |
| 2 | பேட்டை மருத்துவமனை | 4.60 மீ x 2.00 மீ அளவில் MS pipes and Truss |
| 3 | பேட்டை செக்கடி | 5.50 மீ x 3.00 மீ அளவில் RCC |
| 4 | திருநெல்வேலி ___ டவுண் தெற்கு மவுண்ட் ரோடு | 9.00 மீ x 3.00 மீ அளவில் MS pipes and Truss |
| 5 | திருநெல்வேலி ___ டவுண் சந்திப்பிள்ளையார் கோவில் அருகில் | 6.30 மீ x 2.70 மீ அளவில் MS pipes and Truss |
| 6 | திருநெல்வேலி ___ டவுண் மேலரதவீதி | 4.00 மீ x 1.50 மீ அளவில் RCC |

மேற்காணும் பயணிகள் நிற்குமிடங்களை முழுமையாக அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதிக்காக

அலுவலகக் குறிப்பு

மேற்குறிப்பிட்டுள்ள விபரப்படியான 6 எண்ணம் நிழற்குடைகளை முழுமையாக அகற்ற மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 135:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட கூடுதல் காப்புறுதித் தொகையினை (FSD) திரும்ப வழங்கக் கேட்டு M/s P&C Constructions Pvt. Ltd நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 13.01.2020ம் தேதி விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | FSD | Register details |
|---|---|---|---|
| 1 | Water Supply Work @ W.No.8, 9, 10 & 31 | Rs.6,01,307/- | Main Office Lapsed Register 2014-15, P.No.10 |

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ள கூடுதல் காப்புறுதித் தொகை (FSD) மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(iii)-ன்படி மேற்படி தொகை ரூ.6,01,307/- (ரூபாய் ஆறு இலட்சத்து ஓராயிரத்து முந்நூற்றி ஏழு மட்டும்) நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 136:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/3909/2005)

---

6) அரசாணை எண் 298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 02.09.2020-ல் தமிழக அரசு ”உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளின் குத்தகைதாரர்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய மாத வாடகையில் கொரோனா 19 முழு ஊரடங்கு அமுலில் இருந்த 01.04.2020 முதல் 31.05.2020 முடியவுள்ள

இரண்டு மாதங்களுக்கு வாடகை தள்ளுபடி செய்யப்பட்டு ஆணை பிறப்பித்துள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 137:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் அ1/3883/2020)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மற்றும் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s Sri Ramana Building Construction (P) Ltd ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 18.03.2020ம் தேதிய விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | தொகை | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | School Building Package II<br>மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 37 காயிதே மில்லத் மாநகராட்சி மே.நி.பள்ளி வகுப்பறை கட்டிடம் கட்டுதல்<br><br>திருநெல்வேலி மண்டலம்<br>வா.எண் 46 ராணி அண்ணா மாநகராட்சி பெண்கள் மே.நி.பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் | ரூ.2,55,500/- | காலங்கடந்த வைப்புத் தொகை 2015-16 பக்கம் எண் 29 |

அலுவலகக் குறிப்பு:

மேற்படி தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. EMD தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி EMD தொகை ரூ.2,55,500/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) மட்டும் M/s Sri Ramana Building Construction (P) Ltd நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 138:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/865/2020)

---

8) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.52.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 01.04.2007 முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான பாதாள சாக்கடை பம்பிங் மெயின் 12.55 கிலோ மீட்டர், கழிவுநீர் குழாய்கள் 40 கிலோ மீட்டர், கழிவுநீர் உந்து குழாய்கள் நான்கு எண்ணம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று மற்றும் ஆள்இறங்கு குழிகள் 7924 எண்ணங்கள் ஆகியவற்றினை இயக்கி பராமரிக்கும் பணிகளை மாமன்றத் தீர்மானம் எண 146, நாள் **25.02.2020**–ன்படி நான்கு மாத காலத்திற்கு மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**49.80** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை நான்கு மாத காலத்திற்கு மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், திரு.செல்வம் என்பவரின்

ஒப்பந்தப்புள்ளி மாமன்றத் தீர்மானம் எண் 70, நாள் 19.06.2020-ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்னாருக்கு வேலை ஆணை 25.06.2020 அன்று வழங்கப்பட்டு அன்னாரால் பாதாள சாக்கடை பராமரிப்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்படி பராமரிப்பிற்கான காலம் 31.10.2020-ல் முடிவடைய இருப்பதால், மேற்படி திட்டத்தின் அவசர அவசியம் கருதி 01.11.2020 முதல் 28.02.2021 முடிய உள்ள நான்கு மாத காலத்திற்கு பாதாள சாக்கடை திட்டப்பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்டுள்ளவாறு இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை பம்பிங் மெயின் **12.55** கிலோ மீட்டர், கழிவுநீர் குழாய்கள் **40** கிலோ மீட்டர், கழிவுநீர் உந்து குழாய்கள் நான்கு எண்ணம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று மற்றும் ஆள்இறங்கு குழிகள் **7924** எண்ணங்கள் ஆகியவற்றினை இயக்கி பராமரிக்கும் பணி மாமன்றத் தீர்மானம் எண் **70**, நாள் **19.06.2020**–ன்படி தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு, மேற்படி பராமரிப்பு பணிக்கான காலம் **31.10.2020**–ல் முடிவடைய இருப்பதாலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி **01.11.2020** முதல் **28.02.2021** முடிய நான்கு மாத காலத்திற்கு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**49.80** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், மேற்படி பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 139:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(மதிப்பீடு எண் **36/2020–21**)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலப் பகுதிக்குட்பட்ட வார்டு எண் 41-ல் திருநெல்வேலி டவுண் காவல் நிலையத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள திருநெல்வேலி மண்டல அலகு அலுவலகம் கட்டிடம், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது. மேற்படி இடத்தில் தற்போது சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பலஅடுக்கு இருசக்கர வாகன நிறுத்துமிடம் ரூ.5.14 கோடி மதிப்பீட்டில் அரசால் அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்பள்ளிகள் பெறப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது. மேற்படி இடத்தில் உள்ள பழைய கட்டிடங்கள் (அலகு அலுவலகம் 5.35 மீ x 6.30 மீ, 8.40 மீ x 2.80 மீ, RCC) ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் 30.00 மீ x 13.40 மீ, 13.70 மீ x 9.50 மீ) (Madras Tarrace) மற்றும் மண்டல அலுவலகக் கிட்டங்கி 13.60 மீ x 12.90 மீ (A.C.Sheet) அளவில் பழைய கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேலும் இந்த இடத்திற்கள் வேப்பமரம் 3 எண்ணம், புளியமரம் 1 எண்ணம், நாவல்மரம் 1 எண்ணம், நெட்டிலிங்கமரம் 1 எண்ணம் ஆகிய 6 மரங்கள் உள்ளன. மேற்படி பகுதியில் முழுவதும் பலஅடுக்கு இரு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டிடங்கள் கட்ட இருப்பதால், மேற்படி பழைய கட்டிடங்கள் அனைத்தையும் இடிக்க ரூ.1.65 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவும், மேலும் 6 எண்ணம் மரமங்களையும் கோட்டாட்சியர் அனுமதி பெற்று வேரோடு முழுமையாக வெட்டி பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்தவும், மேலும் கட்டிடத்திலிருந்து பிரித்து எடுக்கப்படும் கதவு, ஜன்னல்கள் முதலானவற்றை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்தவும் மாமன்றத்தின் அனுமதிக்காக

அலுவலகக் குறிப்பு:

மேற்குறிப்பிட்ட வார்டு எண் 41-ல் திருநெல்வேலி டவுண் காவல் நிலையத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள திருநெல்வேலி மண்டல அலக அலுவலகம் கட்டிடம், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் உள்ளன. மேற்படி பகுதியில் முழுவதும் பலஅ டுக்கு இரு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டிடங்கள் கட்ட இருப்பதால் மேற்படி கட்டிடங்கள் அனைத்தையும் இடிக்கவும், மேலும் வேப்பமரம் 3 எண்ணம், புளியமரம் 1 எண்ணம், நாவல்மரம் 1 எண்ணம், நெட்டிலிங்கமரம் 1 எண்ணம் ஆகிய 6 எண்ணம் மரங்களையும்

கோட்டாட்சியர் அனுமதி பெற்று வேரோடு முழுமையாக வெட்டி பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்தவும் மேலும் கட்டிடத்திலிருந்து பிரித்து எடுக்கப்படும் கதவு, ஜன்னல்கள் முதலானவற்றை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்தவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 140:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 63/2020-201-திலி)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் எல்கைக்குட்பட்ட குலவணிகர்புரம் கிராமம் மேலப்பாளையம் மண்டலம் நகரளவை வார்டு BP பிளாக் 38, நகரளவை எண் 05 (பழைய புல எண் 1074) நத்தம் புறம்போக்கில் உள்ள 21050 ச.மீ நிலத்தில் 2564 ச.மீ. நிலத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்திட பாளையங்கோட்டை வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளகடிதம் ந.க.எண் ஆ5/2117/2020, நாள் 06.10.2020 மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் எல்கைக்குட்பட்ட குலவணிகர்புரம் கிராமம் மேலப்பாளையம் மண்டலம் நகரளவை வார்டு BP பிளாக் 38, நகரளவை எண் 05 (பழைய புல எண் 1074) நத்தம் புறம்போக்கில் உள்ள 21050 ச.மீ நிலத்தில் 2564 ச.மீ. நிலத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 141:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/5548/2020-மே.பா.)

---

11) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 29, சித்திக் நகர் பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 19 எண்ணம் மின்கம்பங்களில் 19 எண்ணம் 20 W LED தெருவிளக்குகள் பொருத்திட தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய உத்தேச செலவின தொகை ரூ.2,20,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மாமன்ற ஒப்புதலுக்கு

அலுவலகக் குறிப்பு:

மேலப்பாளையம் மண்டலம் சித்திக் நகர் பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 19 எண்ணம் மின்கம்பங்களில் 19 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய உத்தேச செலவின தொகை ரூ.2,20,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 142:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/4349/2020-மே.பா.)

---

12) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 29, அமுதாபெட் நகர், மதீனா நகர் பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 9 எண்ணம் மின்கம்பங்களில் 9 எண்ணம் 20 W LED தெருவிளக்குகள் பொருத்திட தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்ற ஒப்புதலுக்கு

அலுவலகக் குறிப்பு:

மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 29, அமுதாபெட் நகர், மதீனா நகர் பகுதியில் 9 எண்ணம் மின்கம்பங்களில் 9 எண்ணம் 20 W LED விளக்குகள் பொறுத்த

ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 143:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/4358/2020)

---

13) திருநெல்வேலி டவுண் நேதாஜி போஸ் மார்க்கெட் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.10.97 கோடி செலவில் புதிய கட்டுமான பணிகள் நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்படி நேதாஜி போஸ் மார்க்கெட்டில் இயங்கி வந்த கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு தற்போது திருநெல்வேலிடவுண் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு சொந்தமான மைதானத்தில் திறந்த வெளி கடைகள் 252 தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திறந்த வெளி கடைகளின் உரிமதாரர்களுக்கு தற்காலிகமான கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக 18.09.2020ம் தேதிய மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய குழுவினரின் கலந்தாய்வு கூட்ட நடவடிக்கையில் கீழ்க்கண்டவாறு மாத வாடகை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

1) 6 * 6 = 36 சதுரடி அளவிலான தற்காலிக திறந்தவெளி 252 கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.600/- நிர்ணயிக்கவும்,
2) மேலும் நேதாஜி போஸ் மார்கெட்டில் ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்ட நபர்களுக்கே தற்போது மேற்படி தற்காலிக திறந்த வெளி கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதால், முன்வைப்புத் தொகை ஏதும் வசூலிக்க தேவையில்லை எனவும் கடை உரிமதாரர்களுக்கு திறப்பு விழா நடத்த 01.08.2020ம் தேதி முதல் மாத வாடகை வசூல் செய்யவும் குழு பரிந்துரைத்துள்ளது. மேற்படி குழுவின் பரிந்துரை மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பொருளில் கண்டவாறு திருநெல்வேலி டவுண் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு சொந்தமான மைதானத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள 252 திறந்தவெளி கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.600 நிர்ணயம் செய்யவும் மற்றும் நேதாஜி போஸ் மார்க்கெட்டில் ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்ட நபர்களுக்கே தற்போது மேற்படி தற்காலிக கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதால் முன்வைப்புத் தொகை ஏதும் வசூலிக்க தேவையில்லை எனவும் 01.08.2020ம் தேதி முதல் மாத வாடகை வசூல் செய்யவும் மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 144:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் அ1/125/2019-திலி)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் பணிக்காக திரு.லெட்சுமணபாண்டியன் குத்தகைதாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | பணி விபரம் | தொகை | வைப்புத் தொகை பதிவேடு பதிவு விபரம் |
|---|---|---|---|
| 1 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.பேருந்து நிலைய தொலைக்காட்சி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் (2016-19) முன்வைப்புத் தொகை ரூ.1,07,000/- கூடுதல் வைப்புத் தொகை + ரூ.1,07,000/- மட்டும் | ரூ.2,14,000/- | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் 8 (2015-16) |

மேற்கண்டவாறு செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்காணும் வைப்பத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளதால் நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.2,14,000/-ஐ திரு.லெட்சுமணபாண்டியன் குத்தகைதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு:

பொருளில் கண்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலததிற்குட்பட்ட பேருந்து நிலைய தொலைக்காட்சி அமைத்து விளம்பரம் செய்யும் குத்தகை வகைக்காக செலுத்திய வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளதால் நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.2,14,000/-ஐ திரு.லெட்சுமணபாண்டியன் குத்தகைதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 145:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

15) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி கட்டிடங்களில் மேம்படுத்தும் (பகுதி -2) பணியினை ரூ.3.67 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 16.09.2019 அன்று நடைபெற்ற 7வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.7-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3-3 நாள் 04.11.2019-ல் ரூ.3.67 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 28428/2019/DO2 நாள் 09.01.2020-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணியினை மேற்கொள்வதற்கு, 25.02.2020, 31.03.2020 மற்றும் 13.07.2020 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில் மூன்று தேதிகளிலும் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் நான்காவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 2/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 23.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி. மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ்.ஜார்ஜ் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், திருநெல்வேலி மற்றும் (2) மெசர்ஸ்.M.J.Industries, திருநெல்வேலி ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 27.08.2020 -ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் மெசர்ஸ்.M.J.Industries, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்நதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 28.08.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ்.ஜார்ஜ் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 31.08.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ்.ஜார்ஜ் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி கட்டிடங்களில் மேம்படுத்தும் பணிகள் செய்தல். (பகுதி -2) | ரூ.3,46,22,740/- | ரூ.3,92,91,499/- |
| | | | 13.48% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி மெசர்ஸ்.ஜார்ஜ் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 13.48% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 31.08.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 02.09.2020-ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2019-20 -ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின், ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.3,92,91,499/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 13.48% கூடுதலாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தொடர்பாக, 2020-21ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data -2020-21) -ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.113 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் கடிதம் எண்.28428/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5 படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.89% கூடுதலாக உள்ளது. மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், திட்டப்பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1 அத்தியாயம்-2, உட்பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு ரூ.3,92,91,499/- என்பது 2019-20ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 13.48% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 4.89% அதிகமாக உள்ளதினை ஒப்புக்கொள்ளலாம் என 05.10.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரைப்படி மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி கட்டிடங்களில் மேம்படுத்தும் (பகுதி -2) பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.3,92,91,499/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை

விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 13.48% கூடுதலாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தொடர்பாக, 2020-21ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data -2020-21) - ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.113 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் கடிதம் எண்.28428/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5 படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.89% கூடுதலாக உள்ளது. மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், திட்டப்பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1 அத்தியாயம்-2, உட்பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு ரூ.3,92,91,499/- என்பது 2019-20ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 13.48% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 4.89% அதிகமாக உள்ளதினை ஒப்புக்கொள்ளலாம் என 05.10.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரைப்படி மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.367.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 146:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண்.2/2020-21/SCM)